ஜார்ஜியாம்




# பேருந்து நிறுத்த அற்புதம்

*“எதிர்பாராமல்தான் சோஜிக்கை பேருந்து நிலையத்தில் சந்தித்தேன். ஆனால் அது விபத்தல்ல”.*

சோஜிக்கிற்கு நான்கு மொழிகள் பேசத் தெரியும்; ஆனால் அவர் வாசிப்பதில்லை; வாசிக்க விரும்பினதுமில்லை; பல வருடங்களாக புத்தகத்தைத் திறந்ததுமில்லை. அப்போது, முன்னாள் சோவியத் யூனியனைச் சேர்ந்த ஜார்ஜியாவின், கிராமப்புற பேருந்து நிறுத்தம் ஒன்றில் டெய்யைச் சந்தித்தார்.

சோஜிக் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த சமயத்தில்தான் டெய் அங்கு வந்தார். டெய் ஓர் உலகளாவிய ஊழியர்; தன்னுடைய கலாச்சார மக்களிடத்தில் சத்தியத்தைப் பகிர்ந்துகொள்பவர். ஒரே பேருந்துக்காக இருவரும் அந்தப் பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்தார்கள்.

“பேருந்து எப்போது வரும்?” என்று சோஜிக் கேட்டார்.

டெய்க்கு பேருந்து ஓட்டுனரைத் தெரியும்.

“சில நிமிடங்களில் பேருந்து வந்துவிடும். பேருந்து ஓட்டுனரை அழைத்துப் பேசினேன், அருகில் வந்துவிட்டதாகச் சொன்னார்” என்று கூறினார்.

டெய்யும் சோஜிக்கும் பேச ஆரம்பித்தார்கள்.

ஒரே நகரத்தில் சிறிது தூரத்தில் இருவரும் வசித்து வந்ததைப் புரிந்துகொண்டார்கள். டெய்க்கு சோஜிக்கின் அம்மா, சகோதரன், உடன்பிறந்தோரின் பிள்ளைகள், மருக்கமார்கள் ஆகியோரை நன்றாகத் தெரிந்திருந்தது. கோவிட் பொதுமுடக்கின்போது அவர்களுக்கு உணவுகொடுத்து உதவியிருக்கிறார்.

இருவரும் மகிழ்ச்சியோடு

பேசிக்கொண்டார்கள்; இருவரும் அலைபேசி எண்களைப் பரிமாறிக் கொண்டார்கள். அடுத்த சில வாரங் களுக்கு அலைபேசியில் குறுஞ் செய்தி மூலம் பேசிக்கொண்டார் கள்.

சோஜிக்கின் பிறந்தநாள் தினத் தன்று, உப்புத்தூவும் டப்பாவை யும், தன் தோட்டத்தில் பறித்த வண்ணவண்ண ரோசாமலர் பூச் செண்டையும் பரிசாக டெய் கொண்டு வந்திருந்தார். சோஜிக் விற்பனை கணக்காராக வேலைசெய்த இடத் திற்குச் சென்று அவற்றைக் கொடுத்த போது, சோஜிக் பூரித்துப்போனார்.

அதன்பிறகு, அந்த இரு பெண் களும் தங்கள் வீடுகளில் சந்திக்க ஆரம்பித்தார்கள். டெய் செவந்த் -டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவர் என்பதை சோஜிக் அறிந்துகொண் டார். செவந்த்-டே அட்வென்டிஸ் டுகள் பற்றி அவர் கேள்விப்பட்ட தில்லை. அவர்களைப் பற்றி அதி கம் அறிந்துகொள்ள விரும்பினார்.

சோஜிக் நான்கு மொழிகள் பேசக்கூடியவர் என்பதையும், ஆனா லும் அவர் வாசிப்பதில்லை என் பதையும் டெய் அறிந்தார். 15 வரு டங்களுக்குமுன் பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, எந்தப் புத்தகத்தை யும் திறந்து அவர் வாசித்ததில்லை என்பதும் தெரிந்தது. 'தேவனைப் பற்றி நான் சொல்லுகிற வார்த்தை களை வேதாகமத்தை வாசித்து அவ ரால் சோதிக்கமுடியாவிட்டால், சோஜிக்கிற்கு அதை எப்படி நான் போதிக்க முடியும்' என்று டெய் யோசித்தார்.

அதுபற்றி டெய் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில், ஜார்ஜி யாவின் தலைநகரிலிருந்து, சற்று தூரத்திலிருந்த டிபிசிலி எனுமிடத் திலிருந்த அட்வென்டிஸ்ட் சபைக்கு ஆராதனைக்கு வரும்படி சோஜிக் கை அழைத்தார். காலையில் ஆரா தனையில் கலந்துகொண்டு, மதி யத்திற்கு பிறகு வேதாகம வகுப்பு நடத்துவதுபற்றிச் சொல்லிக்கொடுக் கத் திட்டமிட்டிருந்தார். அதனால் தான் சோஜிக்கை காலை ஆராத னைக்கு அழைத்திருந்தார்; ஏனென் றால், மதிய வகுப்பில் கலந்து கொள்ள விரும்பமாட்டார் என்று நினைத்தார்; அவருக்குத்தான் வாசிப் பதில் விருப்பமில்லையே!

ஆனால் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, சந்தோஷமாக டிபிசிலிக்குச் சென்றார்; அந்த நாள் முழுவதையும் டெய்யுடன் செல விட விரும்பினார். சோஜிக்கைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காக டெய் ஒத்துக்கொண்டார்.

சோஜிக்கிற்கு ஓய்வுநாள் ஆரா தனை பிடித்திருந்தது. தேவனோடு நெருங்கி ஜீவிக்க விரும்புகிறவர் கள் முன்பாக வரும்படி பிரசங்கி யார் அழைத்தபோது, சோஜிக் முன் பாகச் சென்றார்.

மதிய வேளை வகுப்பில், சபை யின் மேடையில் போதகர்கள் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். வேதப்பாடம் நடத்துவதுபற்றி அறிய விரும்பின அங்கத்தினர்கள் பலர் சபையில் கூடியிருந்தார்கள். போதகர் ஒரு வர் சோஜிக்கைப் பார்த்து, "சகோ தரி, நீங்கள் ஞானஸ்நானம் பெற்று விட்டீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை" என்று சொன்னார்.

“நீங்கள் எனக்கு தேவை” என்று சொல்லி அவரை மேடைக்கு வரும்படி அழைத்தார்.

சோஜிக் சற்று வெட்கத்தோடு மேடைக்குச் சென்றார். அவர் தர்ம சங்கடமாக உணரக்கூடாது என்பதற்காக அவருக்கு அருகில் ஒரு இருக்கையைப் போட்டு, டெய் அமர்ந்து கொண்டார்.

பிறகு, சோஜிக்கை எடுத்துக் காட்டாக வைத்து, அந்தப் போதகர் வேதப்பாடம் நடத்தவேண்டிய விதம்பற்றி விளக்கினார். வேத ஆராய்ச்சி கேள்விகளுக்குப் பதில் காணும்படி வேதாகமத்தைத் திறக்குமாறு அந்தப் போதகர் சோஜிக்கிடம் சொன்னார். வாழ்க்கையில் முதன்முறையாக சோஜிக் வேதாகமத்தைத் திறந்தார். வசனங்களை எவ்வாறு தேடவேண்டும், பதில்களை எவ்வாறு கண்டுபிடிக்கவேண்டும் என்று போதகர் சொல்லிக் கொடுத்தார்.

அவர்கள் வீட்டிற்குத் திரும்பின சமயத்தில், அந்த வேதப்பாட வகுப்புபற்றி என்ன நினைப்பதாக சோஜிக்கிடம் டெய் கேட்டார்.

“வேதாகமத்தில் பதில் தேடுவது எனக்குப் பிடித்திருக்கிறது. இதற்குமுன் இல்லாத சமாதானத்தை உணருகிறேன்” என்று சோஜிக் சொன்னார்.

டெய் தன் பையிலிருந்து ஒரு வேதாகமத்தை எடுத்து, “உங்களுக்கு ஒரு பரிசு வைத்திருக்கிறேன்” என்று கொடுத்தார்.

தனக்கு வேதப்பாடம் நடத்துமாறு டெய்யிடம் சோஜிக் கேட்டுக் கொண்டார்.

டெய்க்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. சாத்தியமற்றது போலத் தோன்றுகிற காரியங்களையும் சாத்தியமாக்குபவர் பரிசுத்த ஆவியானவர். தன் வாழ்க்கையில் முதன்முதலாக வாசிக்க விரும்பினது மட்டுமல்லாமல், வேதாகமத்தை வாசிக்கவும் சோஜிக் விரும்பினார்.

இன்று சோஜிக்கிற்கு டெய் வேதப்பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்; இப்போது சோஜிக் ஐந்தாவதாக ஒரு மொழியைக் கற்றுக்கொண்டு இருக்கிறார்; அது, பரலோகத்தின் நித்திய மொழியான அன்பு. இருவரும் சேர்ந்து ஓய்வுநாள் ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள்.

ஒரு நேர்முகப் பேட்டியின் போது, சோஜிக்கை எதிர்பாராத விதமாக பேருந்து நிலையத்தில் சந்திப்பதற்கு தேவன் கொடுத்த வாய்ப்புக்காக டெய் நன்றி சொன்னார். “எதிர்பாராமல்தான் சோஜிக்கை பேருந்து நிலையத்தில் சந்தித்தேன். ஆனால் அது விபத்தல்ல. அது தேவனுடைய மிகப்பெரிய அற்புதம்” என்று சொன்னார்.

இப்போதும்கூட வேதாகமத்தைதவிர வேறு எந்தப் புத்தகத்தையும் வாசிப்பதற்கு சோஜிக் விரும்புவதில்லை. “எனக்கு வாசிக்கப் பிடிக்காது, ஆனால் வேதாகமத்தை வாசிப்பதில் பிரியப்படுகிறேன்” என்று சொன்னார்.

ஜார்ஜியாவில் சுகாதார மையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கை பயன்படும்.